**செய்தி வெளியீடு எண்: 214** **நாள்: 09.04.2013**

# <u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை இன்று (9.4.2013) தலைமைச் செயலகத்தில், வழக்கறிஞர் செல்வி நர்மதா சம்பத் அவர்கள் இந்திய நாட்டின் சார்பில் அமெரிக்காவில் நடைபெற்ற சர்வதேச பார்வையாளர் தலைமைப் பண்பு திட்ட நிகழ்ச்சியில் (International Visitor Leadership programme) கலந்து கொண்டு திரும்பியதையொட்டி சந்தித்து வாழ்த்து பெற்றார்.

சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞரும் டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் மற்றும் சிப்காட் நிறுவனத்தின் அரசு வழக்கறிஞருமான செல்வி நர்மதா சம்பத் அவர்கள் அமெரிக்கா நாட்டின் தலைநகர் வாஷிங்டனில் ஹேக் மாநாட்டின் தொடர்ச்சியாக நடைபெற்ற சர்வதேச பார்வையாளர் தலைமைப் பண்பு திட்ட நிகழ்ச்சியில் (International Visitor Leadership programme) இந்திய நாட்டின் சார்பில் தமிழகத்திலிருந்து கலந்து கொண்டார். இந்த மாநாட்டில் 25 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். இந்திய நாட்டின் சார்பில் இந்த திட்ட நிகழ்ச்சிக்கு இவர் ஒருவர் தான் அழைக்கப்பட்டு இருந்தார்.

மேற்கண்ட சர்வதேச பார்வையாளர் தலைமைப் பண்பு திட்ட நிகழ்ச்சியில் (International Visitor Leadership programme) கலந்து கொண்டு திரும்பியதையொட்டி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை இன்று தலைமைச் செயலகத்தில் வழக்கறிஞர் செல்வி நர்மதா சம்பத் அவர்கள் சந்தித்து வாழ்த்து பெற்றார். அப்போது மாநாட்டில் விவாதிக்கப்பட்ட பொருள்கள் குறித்தும் இந்திய நாட்டின் சார்பில் தமிழகத்திலிருந்து தான் கலந்து கொண்டது குறித்தும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் தெரிவித்தார்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.
நாள்: 9.4.2013